**ஜனவரி – 09**

# TNPSC துளிகள்

- ஜம்மு மற்றும் காஷ்மீரின் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பினை மிக மேம்படுத்தும் வகையில், ஒரு புதிய ஜம்மு இரயில்வே கோட்டத்தினை (இந்தியாவின் 69வது) பிரதமர் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.
- அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி சபையானது (AICTE), இந்தியாவினை செயற்கை நுண்ணறிவில் உலகளாவிய முதன்மைத்துவம் பெறச் செய்வதற்காக என்று 2025 ஆம் ஆண்டை "செயற்கை நுண்ணறிவு ஆண்டாக" நியமித்துள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் முதன் முறை ஆக நடைபெற உள்ளன.
- மத்திய உள்துறை அமைச்சர் புது டெல்லியில் தீவு மேம்பாட்டு முகமையின் (IDA) 7வது கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- புது டெல்லியின் பாரத மண்டபத்தில் கிராமீன் பாரத் மஹோத்சவ் 2025 நிகழ்வினை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- 18வது பிரவாசி பாரதீய திவாஸ் மாநாடு ஆனது, ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் “Diaspora's Contribution to a Viksit Bharat” என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்று வருகிறது.
- 82வது வருடாந்திர கோல்டன் குளோப் விருது விழாவானது அமெரிக்காவின் கலிபோர்னியாவின் பெவர்லி ஹில்ஸ் எனுமிடத்தில் உள்ள பெவர்லி ஹில்டன் தங்கும் விடுதியில் நடைபெற்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு விரைவு திருத்தம், 2025 – தமிழ்நாடு




- 2025 ஆம் ஆண்டு புகைப்படங்களுடன் கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் திருத்தத்தின் ஒருங்கிணைந்த இறுதிப் பதிப்பு ஆனது வெளியிடப்பட்டது.
- சமீபத்தில் இது தமிழ்நாட்டின் தலைமை தேர்தல் அதிகாரியான அர்ச்சனா பட்நாயக் என்பவரால் வெளியிடப் பட்டது

- கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழகத்தின் வாக்காளர் பட்டியலில் 9 லட்சம் கூடுதல் வாக்காளர்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர்.
- ஜனவரி 05 ஆம் தேதி நிலவரப்படி, தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 6.36 கோடியாக இருந்தது.
- 6.36 கோடி வாக்காளர்களில் 3.24 கோடி பேர் பெண்கள், 3.11 கோடி பேர் ஆண்கள், 9,120 பேர் மூன்றாம் பாலினத்தவர் ஆவர்.
- 6.90 லட்சம் வாக்காளர்களுடன் அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக சோழிங்கநல்லூர் தொடர்கிறது.
- கவுண்டம்பாளையம் (கோயம்புத்தூர்) 4.91 லட்சம் வாக்காளர்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் இதில் 1.76 லட்சம் நபர்களுடன் மிகவும் குறைந்த வாக்காளர்கள் உள்ள தொகுதி என்ற இடத்தில் உள்ள நிலையில் இதனைத் தொடர்ந்து சென்னையின் துறைமுகம் தொகுதி உள்ளது
- 3,740 வெளிநாடுவாழ் வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் மற்றும் 4,78,007 மாற்றுத் திறனாளிகள் (PwD) இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- இப்பட்டியலின் திருத்தக் காலத்தின் போது சேர்க்கப்படுவதற்காக பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களில், 18 முதல் 19 வயதுக்குட்பட்ட 4,10,069 வாக்காளர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.

## அதிக எண்ணிக்கையிலான உழைப்பு நாட்கள்




- மொத்தம் 8.42 லட்சம் உழைப்பு நாட்களுடன், தமிழக மாநிலமானது மிகத் துடிப்பு மிக்க தொழில்துறைகளின் மையமாக, குறிப்பாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தன்னை உறுதியாக நிலை நிறுத்தியுள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களை விஞ்சி, நாட்டிலேயே அதிக

உழைப்பு நாட்களை தமிழகம் பெற்றுள்ளது.

- இது ஒரு பணியாளருக்குச் சராசரி உழைப்பு நாட்கள் என்ற வீதத்தில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களை பின்தள்ளியுள்ளது.
- சுமார் 6.45 லட்சம் ஊழியர்களைக் கொண்ட மகாராஷ்டிரா மற்றும் சுமார் 5.28 லட்சம் ஊழியர்களைக் கொண்ட குஜராத் ஆகியவை, சுமார் 4.81 லட்சம் ஊழியர்களைக் கொண்ட தமிழகத்தை விட அதிக மூலதன முதலீடுகளைக் கொண்டுள்ளன.
- தமிழகத்தின் சராசரி உழைப்பு நாட்கள் ஒரு ஊழியருக்கு 1.75 ஆகும் என்ற நிலையில், இது மகாராஷ்டிராவில் 1.13 மற்றும் குஜராத்தில் 1.37 ஆகும்.

## அடையாறு ஆற்றில் மலக்குடற் பற்றுயிரிகள்




- அடையாறு ஆற்றில் மலக்குடற் பற்றுயிரிகளின் அளவு ஆனது நிர்ணயிக்கப்பட்ட ஒரு பாதுகாப்பான வரம்பை விட 10 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- மலக்குடற் பற்றுயிரிகள் ஆனது 100 MPN/100 மில்லி என்ற அனுமதிக்கப்பட்ட வரம்பை விட அதிகமாக - 1026 MPN/100 ml - அதிக அளவில் இருப்பதாக இந்தச் சோதனைகள் காட்டுகின்றன.
- MPN என்பது மிகவும் சாத்தியமான மதிப்பீட்டு எண் ஆகும், இது தண்ணீரில் உள்ள நுண்ணுயிரிகளை அளவிடப் பயன்படும் ஒரு மதிப்பீடாகும்.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அடையாறு சுற்றுச்சூழல் சார் பூங்காவில் மீன்கள் உயிரிழந்த சம்பவத்திற்கு இந்த மாசுபாடு காரணமாக நம்பப் படுகிறது.
- மேலும், உயிரியல் ஆக்ஸிஜன் தேவை 133 mg/l – லிட்டருக்கு எத்தனை மில்லி கிராம் (தரநிலை: 3 mg/l), வேதியிய ஆக்ஸிஜன் தேவை 136 mg/l (தரநிலை: 280 mg/l) மற்றும் மொத்த நைட்ரஜன் 57.74 mg/l (தரநிலை: 23.697 mg/l) போன்ற நிலைகளுடன் நீரின் தரத்தின் மற்ற குறிகாட்டிகளும் ஆபத்தான அளவில் உள்ளன.


# தேசியச் செய்திகள்

## துணை வேந்தர்களின் நியமனங்களுக்கான UGC வழிகாட்டுதல்கள்

- பல்கலைக்கழக மானியக் குழு (UGC) ஆனது, மாநிலங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதில் மிகவும் பரந்த அதிகாரங்களை ஆளுநர்களுக்கு வழங்கும் வகையில், தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் பொதுத் துறை சார்ந்த நபர்கள் ஆகியோர் இந்தப் பதவியில் நியமிக்கப் படுவதற்கான வாய்ப்பினையும் வழங்கும் வகையிலான புதிய

விதிகளை வெளியிட்டுள்ளது.

- இதன் மூலம் இந்தப் பதவிக்குக் கல்வியாளர்களை மட்டுமே தேர்ந்தெடுக்கும் ஒரு மரபு ஆனது உடைக்கப்படுகிறது.
- இந்தப் புதிய விதிமுறைகள் ஆனது துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுக்கும் செயல் முறையில் வேந்தர்களுக்கு அதிக கட்டுப்பாட்டை வழங்கும்.
- வேந்தர்/பார்வையாளர் மூன்று நிபுணர்களைக் கொண்ட ஒரு தேடல் மற்றும் தேர்வுக் குழுவை அமைக்க வேண்டும்.
- ஒப்பந்த ஆசிரியர் நியமனங்களுக்கான இதில் உச்ச வரம்பும் நீக்கப் பட்டது.
- 2018 ஆம் ஆண்டு விதிமுறைகள் அத்தகைய நியமனங்களை ஒரு கல்வி நிறுவனத்தின் மொத்த ஆசிரியர் பதவிகளில் 10 சதவீதமாக கட்டுப்படுத்தியிருந்தன.
- இந்தப் புதிய வரைவு விதிமுறைகளானது, இளங்கலை அல்லது முதுகலை நிலைகளில் விண்ணப்பதாராரின் கல்வித் துறையானது, PhD (முனைவர்) துறையிலிருந்து வேறு பட்டால், அவர்கள் PhD பெற்ற துறையில் ஆசிரியராக நியமிக்க தகுதியுடையவராகக் கருதப்படுவர் என்றும் கூறுகிறது.
- மேலும், இளங்கலை அல்லது முதுகலை நிலைகளில் அவ்விண்ணப்பதாரரின் துறை ஆனது, NET அல்லது SET போன்ற தகுதித் தேர்வுகளில் அவர்களின் துறைகளிலிருந்து வேறுபட்டதாக இருந்தால், விண்ணப்பதாரர் அந்தத் தேர்வுகளில் தாம் தகுதி பெற்ற பாடத்தில் ஆசிரியராக நியமனம் பெறத் தகுதியுடையவர் ஆவர்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்


## 2025 ஆம் ஆண்டின் முதல் விண்கல் பொழிவு

- குவாட்ரான்டிட் விண்கல் பொழிவானது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தின் பெரும் தொடக்கத்தில் நிகழ்கிறது.
- இது மிகவும் தீவிரமான வருடாந்திர விண்கல் பொழிவுகளில் ஒன்றாகும் என்பதோடு, மேலும் சில மணிநேரங்கள் மட்டுமே நீடிக்கும் குறுகிய கால உச்சக் கட்ட செயல்பாட்டு காலத்தினைக் கொண்டுள்ளது.

- இது பூட்டெஷ் (Boötes) விண்மீன் திரளின் வடகிழக்கு முனையில் இருந்து கிளைக்கிறது.
- குவாட்ரான்டிட்ஸ் என்ற பெயர் ஆனது தற்போது வழக்கற்றுப் போன குவாட்ரான்ஸ் முரளிஸ் என்ற விண்மீன் திரளிலிருந்து உருவானது.
- 1830 ஆம் ஆண்டுகளில் பெல்ஜிய வானியலாளர் அடோல்ஃப் க்யூட்லெட் என்பவர் முதல் முறையாக இந்த விண்கல் பொழிவினைக் கண்டறிந்தார்.




## ஆழமற்ற அலைப் படுகையில் அமைந்த ஆராய்ச்சி மையம்




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, இந்திய ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை தேவைகளை மிக நன்கு பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான

ஆசியாவின் மிகப்பெரியதொரு ஆழமற்ற அலைப் படுகை ஆராய்ச்சி மையத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

- இந்தியத் துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடலோரப் பொறியியல் கட்டமைப்புகள் ஆகியவற்றில் உள்ள சவாலான பிரச்சனைகளை இது தீர்க்க இயலும்.
- இது மிகச் சிக்கலான அலை மற்றும் நீரோட்ட இடையூறுகளைக் கையாளக்கூடிய பல் திசையிலான ஆழமற்ற அலைப் படுகை ஆகும்.
- துறைமுகம், கடலோர, கடல்சார், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் மிகவும் ஆழமற்ற நீர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ள திட்டங்களுக்குப் இந்த அலைப் படுகைகள் பயன்படுத்தப்படலாம்.

## ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புதிய ஊடலை அமைப்பு

- ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது அதன் அதிநவீன குறைந்த ஆற்றல் நுகர்விலான AWaDH ஊடலை நுழைவாயில் மற்றும் பிணைய அமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தச் செலவினம் மிக குறைந்த முதல்-வகையான அமைப்பு ஆனது ஊடலை மூலம் இயக்கப் பட்ட உணர்விகளை மேகக் கணினி இயங்குதளங்களுடன் இணைக்கிறது.
- இது வேளாண்மை, தளவாடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நெகிழ்திறன் போன்ற பல் துறைகளில் தடையற்றத் தரவுப் பரிமாற்றம், நிகழ்நேரச் சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளை வழங்குகிறது.
- இது ஒரு நேர்க்கோட்டு (LOS) அமைப்பில் சுமார் 1 கிலோ மீட்டர் வரையிலான தரவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ள உதவுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பழுப்புப் பட்டை ராயல் வண்ணத்துப்பூச்சி - திரிபுரா

- திரிபுராவில் உள்ள செபஹிஜாலா வனவிலங்கு சரணாலயத்தில் ராச்சனா ஜலிந்த்ரா இந்திரா என்று அறிவியல் பூர்வமாக அறியப்படும் அரிய வகை பழுப்புப் பட்டை ராயல் வண்ணத்துப்பூச்சி கண்டறியப்பட்டுள்ளது.

- இந்தியாவில் ராச்சனா ஜலிந்திராவின் மூன்று துணை இனங்கள் காணப்படுகின்றன.
- இது பின்வரவனவற்றை உள்ளடக்கியது.
    - தென்மேற்கு இந்தியாவிலிருந்து கோவா வரையிலான பகுதிகளில் மக்கண்டியா,
    - அந்தமான் பகுதிகளில் ராச்சனா ஜலீந்திர டர்பினா மற்றும்
    - ஒரிசாவிலிருந்து மேற்கு வங்காள மாநிலம் மற்றும் வங்காளதேசம் வரையிலான பகுதிகளில் ராச்சனா ஜலீந்திரா இந்திரா.
- 1972 ஆம் ஆண்டு இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் IIவது அட்டவணையின் கீழ் இந்த இனம் சட்டப் பூர்வமாகப் பாதுகாக்கப் படுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பிரசிடென்ஷியல் மெடல் ஆஃப் ஃப்ரீடம் 2025




- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் அரசியல், பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் பல

துறைகளில் 19 பொது நபர்களின் பங்களிப்பிற்காக அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார்.

- இதில் சில நான்கு அறியப்பட்ட தலைவர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள்: ஹிலாரி கிளிண்டன், புரவலர் மற்றும் முக்கிய ஜனநாயகக் கட்சி நன்கொடையாளர் ஜார்ஜ் சோரோஸ் மற்றும் ராபர்ட் F. கென்னடி (மரணத்திற்குப் பின்னதாக) ஆகியோருக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- அர்ஜென்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி, மனித இனவியலாளர் ஜேன் குடால் மற்றும் நடிகர் டென்சல் வாஷிங்டன் ஆகியோரும் இந்த விருதுப் பட்டியலில் உள்ளனர்.
- பிரசிடென்ஷியல் மெடல் ஆஃப் ஃப்ரீடம் என்பது அமெரிக்காவின் உயரிய குடிமை விருதாகும் என்ற நிலையில் இது ஒரு நபர் தனது வாழ்நாளில் செய்தப் பணிக்கான அங்கீகாரமாக வழங்கப் படுகிறது.
- இது அதிபர் ஹாரி S. ட்ரூமன் (1945-1953) அவர்களால் 1945 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.

# விளையாட்டு செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு கோ கோ உலகக் கோப்பை போட்டி கோப்பை & சின்னம்




- இந்தியாவானது முதல் முறையாக புது தில்லியில் இதனை நடத்த உள்ளது.
- இந்திய கோ கோ கூட்டமைப்பு (KKFI) ஆனது முதலாவது கோ கோ உலகக் கோப்பைப் போட்டிக்கான கோப்பைகளை வெளியிட்டுள்ளது.
- இந்தப் போட்டியில் ஆறு கண்டங்களில் உள்ள 24 நாடுகளைச் சேர்ந்த 21 ஆண்கள் மற்றும் 20 பெண்கள் அணிகள் பங்கேற்க உள்ளன.
- இந்த உலகக் கோப்பை போட்டியில் ஆண்கள் சாம்பியன்ஷிப் போட்டிக்கான நீலநிறக் கோப்பை மற்றும் பெண்கள் போட்டிக்கான பச்சை நிறக் கோப்பை ஆகிய இரண்டு கோப்பைகள் வழங்க ப்படும்.
- KKFI ஆனது ‘தேஜஸ்’ மற்றும் ‘தாரா’ என்ற இரட்டை இந்தியச் சிறுமான்களை இந்தப்

போட்டிக்கான அதிகாரப்பூர்வ உருவச் சின்னங்களாகப் பயன்படுத்துகின்றது.

- இந்த உருவச் சின்னங்கள் ஆனது இவ்விளையாட்டின் முக்கியப் பண்புகளான வேகம், சுறுசுறுப்பு மற்றும் குழுப்பணி ஆகியவற்றை உள்ளடக்கியது.
- தேஜஸ் ஆனது புத்திசாலித்தனம் மற்றும் ஆற்றலைக் குறிக்கிறது மற்றும் தாரா, வழி காட்டுதல் மற்றும் விழைவு ஆகியவற்றைக் குறிக்கிறது.

# இதரச் செய்திகள்

## 13 ஆம் நூற்றாண்டின் புனிதத் துறவி நரஹரி தீர்த்தரின் சிலை

- 13 ஆம் நூற்றாண்டின் துறவியான நரஹரி தீர்த்தரின் சுமார் மூன்றடி உயரச் சிலையை ஆராய்ச்சியாளர் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- அவர் சிகாகோலு நகரத்தினைச் சேர்ந்தவராக இருக்கலாம் (தற்போதைய ஸ்ரீகாகுளம்).
- தீர்த்தரின் முன்னோர்கள் தற்போதைய ஒடிசா மாநிலமாக உள்ள முந்தைய கஜபதி பேரரசில் நிலப்பிரபுக்களாக இருந்தனர்.
- கிழக்கு கங்கை வம்சத்தின் மன்னர்களுக்கு 30 ஆண்டுகளாக துறவிகள் உதவியாக இருந்ததாக இந்தக் கல்வெட்டுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.
- அவர் ஏற்கனவே மத்வாச்சார்யா அவர்களால் நான்காவது வரிசையில் ஒரு குருவாக நியமிக்கப் பட்டார் என்பதை இது குறிக்கிறது.
- சிம்மாசலம் மற்றும் ஸ்ரீகூர்மம் (ஸ்ரீகாகுளம்) ஆகிய கோயில்களில் கிடைக்கப் பெற்ற சில கல்வெட்டுகளில் இது குறித்த அவரதுப் பங்களிப்புகள் நன்கு ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்த துறவியின் பெயருடன் 'லோக சுரக்சானா அதி நிபுண:', 'யோ அவதி கலிங்கப் பூ சாம்பவான்' ஆகிய சில பெரும்மரியாதைக்குரிய முன்னொட்டுகள் பயன்படுத்தப் படுகின்றன.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★